10/3

உ

குருவேதுணை.

# தியானுநுபூதி.

8599
R65:31
TIRUPPOVANA MADAM

இஃது,

முருகதாசசுவாமிகளென்றும்,
திருப்புகழ்ச்சுவாமிகளென்றும்,
விளங்குகின்ற

## தண்டபாணிசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளியது.

தி-அக்ஷயலிங்கமுதலியாரவர்களால்,
ஊ - புஷ்பரதசெட்டியாரவர்களது
கலாரத்நாகரம் என்னும்
அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்த்தர்—ஈஸ்வரஹு மாசிமீ.

குருவே துணை.

# தியானாநுபூதி.

காப்பு-நேரிசைவெண்பா.

வயாநீங்கற்காமுயலு மாதவச்சிராய
தியானநுபூதி நன்னூல்செப்பத்-தயாநாட்டங்
கொண்டகுருவாதியபல் கோடிதெய்வ மாகியொன்
ருய்த், தொண்டருள்வா மூண்மை துணை.

கட்டளைக்கலித்துறை.

தமிழடியாகு மெழுத்துருவுஞ் சந்தமா முடியு, மிமிழ்திரைப்பாரி லெனக்கீந்தவெண்டிரு வின்பவெள்ளத், தமிழ்பவர்வேண்டுந் தியானநுபூதியு மாங்கவித்தாள், சிமிழ்முலைப் பாலமுதங் கொடுத்தாளுந் தினமு முண்டே.

அறுசீர்விருத்தம்.

பலகலை தெரிந்திட்டாலும் பத்திமுன்னுகச்சொல்லு, நலமொரு மூன்றுற்றுலு நண்ணுமா றனைத்துஞ்

செய்து, குலவுசீ ரெய்திடாது குருவடி வாதியாகப், புலவர்செய் தியானமொன்றிற் புக்கவர் கைக்கொள் வாரே.

## நூல்.

எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தங்கள்.

சித்திமுத்தியென்னு மிருபேறும்பெற்றுத்
திரும்பாதவீட்டினிற்போய்ச் சேருவார்க்குப்
பத்திவைராக்கிய ஞானமென்னுமூன்றும்
பக்குவமேயவர்நடக்கும் பாதைதன்னைச்
சத்தியமாயோசிக்கிற் றியானமொன்றே
சகுணமேயதற்கிசைவாஞ் சார்ந்துநின்றூற்
புத்தியினுக்கடங்காநிர்க் குணமுந்தோன்றும்
பூர்வதவப்பயனில்லார் பொருந்திடாரே. (க)

தற்சிவசாட்சிகுரு வடிவமென்னச்
சாற்றுநிலைசமரசத்தோர் தமக்கேயாகு
முற்சீவன்செய்ததவ முதிர்ந்தாலுண்டா
மூவிரண்டுசமையத்து மூர்த்திமானை
நற்சிவதிசையாகத் தியானிப்போர்க்கு
ஞானமெய்தும் பற்பலருநாடுமாறு
பிற்சீவர்செய்துவைக்கு முருவநாட்டம்
பிடித்தோருந்தக்கபயன் பெறுவாரன்றே. (உ)

சகுணபரம்பராநாட்டம் பெற்றபல்லோர்
தனிவீட்டிற்புக்கநலஞ் சாற்றக்கேட்டு
மிகுபனுவலாய்ந்தமதி தன்னைக்கொண்டு
மேலானநிர்க்குணத்தை விரும்பிநாட
றகுதியல்லமுடிந்தபொருளதுவானாலுஞ்
சகளத்தாலன்றியதைச் சாரொண்ணாது
வெகுவிதத்தெய்வங்களுண்டென் றுழலவேண்டாம்
விளம்புமொன்றேபலவடிவா விளங்குமாதோ.( )

நீராலங்கட்டியெனத் தடித்தல்போலு
நெய்யுறைந்துகையினிடை நிலவல்போலும்
பேராகங்கொண்டுதெய்வ நிற்குமாகிற்
பெருமைகுன்றுமெனக்கருதிப் பேசொண்ணாத
சீராருநிர்க்குணமே யென்றுகூவித்
திருவருட்சத்தியையிகழ்ந்து செத்துப்போவார்க்
கீராறுசமையத்தோ ரடையும்பேறு
மெய்திடாதெனத்தெளிவ தெளிதன்றம்மா. (௪)

இகம்பரமென்றுரைக்குமிரு தலத்துள்ளாரு
மேத்தெடுக்கும்பெருவாழ்விற்கிச்சைகொண்டோர்
திகம்பரமாம்பொதுவடிவைக் கருதொண்ணாது
திருவுருவாத்தியானித்தே தேறவேண்டு

மகம்புறமென்றையமுற்று வருந்தவேண்டா
மவ்விரண்டுமனவெளியி லடங்குமாற்றுன்
முகம்பிரசன்னமதாகத் தோற்றும்வண்ண
முயலலாங்களங்கமற்ற முறையுமீதே. (ரு)

எந்தவிதமூர்த்தியையா னுலுநேரோ
யிருவிழியாற்கண்டுதொழு திறைஞ்சினன்றிப்
பந்தமறுதெனத்தெளிந்து துணிந்துபாடு
படுமவர்களெல்லோரும் பகரக்கேண்மோ
வுந்தமக்குமந்திரமோர் துணையன்றேனு
மொழிப்பதியல்பன்றதனு லொருசொல்லாகிச்
சிந்தனையினுதவியின்றி நாவுஞ்சொல்லுந்
திறத்தினதாம்பழக்கமிகச் செய்யினன்றே. (சா)

கண்டனவெல்லாந்தனது தெய்வமாகக்
கருதிவழிபடுநிலைகை வந்திட்டாலுங்
கொண்டபிடிநழுவாமற் றியானஞ்செய்து
குறித்தவுருச்சாக்கிரத்திற் குலவப்பெற்று
விண்டமொழிக்குத்தாரம் விளம்பக்கேட்டு
விரும்பியவாமுடித்தருளும் வீறுந்தோய்ந்து
மண்டலமும்விண்டலமு மதிக்கவாழ்ந்து
மாசற்றவீடடைந்தோர் வல்லோர்தாமே. (எ)

அகண்டபரிபூரணநிட் களமாந்தெய்வ
மளவிறந்தநெறிதோறு மன்பர்நாட்டந்
திகழ்ந்தபடிதோன்றுமன்றிப் புராணஞ்சிற்பஞ்
செப்பும்விதிக்கடங்காது தென்னூரிற்
சகம்புகழவரும்விகட கவிமுன்னுகத்
தலையோராயிரத்தொடிரு தடந்தோள்காட்டி
யகந்தைமொழிகேட்டவித முலகஞ்சொல்லு
மபக்குவத்தோர்க்குரைத்தாலு மறிந்திடாரோ. ()

சகளவுபாசனையாண்டான் றனதுவேட்கைத்
தையலருகடுத்தோருஞ் சாகச்செய்தா
னகளநிராமயஞான நிட்டைத்தாயு
மானவனையொருவனெடுத் தழலிற்சுட்டான்
குகனடிமையாமருண கிரியன்றந்தக்
கோபுரத்திற்பூவருதற் குறித்தேத்தாமற்
சுகமதிற்புக்கேகியுட லிழந்தான்கண்டீர்
தொண்டுசெய்யுநன்னெறியைத்துறக்கொண்ணுதே.

தெய்வமொன்றேயென்பதுசத் தியமேயாகுந்
தெளிவில்லார்பலவிதமாத் தியானித்தாலு
மைவகைப்பூதமுங்கடந்த வதுவவ்வாறந்
கவிர்ந்தறிவுமுதிர்ந்ததற்பி னனைத்துந்தானும்

பொய்வழித்தீமையின்முயல்வார் மேலாந்தெய்வம்
போற்றினுமேனையர்வணங்கும் புன்மைத்தெய்வஞ்
செய்வலிக்காற்றாதவித மநுபவத்திற்
றேறலன்றிவேறொருவர் தெரிக்கொணாதே (௰)

தானேதன்மூர்த்தியென்பார் சிலர்தானல்லாச்
சகலமுமென்பார்சிலரோர் தன்னேரில்லாக்
கோனேயென்பார்சிலரொப் பொருளுமான
குருவென்பார்சிலரொந்தக் கொள்கையோருந்
தேனேர்செந்தமிழ்ச்சுவையுண் டணிமாவாதிச்
சித்திமிகச்செய்துமனத் திருத்தியெய்தி
மானேர்கண்ணார்கலவிச் சுகமுங்கைத்து
மறுபிறப்பில்லாதொழிந்தான் மாண்பினோரே. ()

ஒருவனொருமூர்த்தியினைத் தியானஞ்செய்தா
லுணாக்கரும்பல்வடிவெடுத்துட் கனவிற்றோன்றிப்
பெருமைமிகுசாக்கிரசொற் பனத்தில்வந்து
பேசலன்றிச்சாக்கிரத்திற் பிறர்வாய்ச்சொல்லா
மருவுமசரீரியுமாய்ப் பேசுங்கேட்டு
மகிழ்ந்திறுமாந்திடவேண்டாம் வருத்துந்தோறு
மிருவிழிமுற்குலவுமட்டு முயலவேண்டு
மிளைப்புற்றாலநுபவமு மிழந்துபோமே. (௰௨)

சாக்கிரத்திற்கண்டகுரு மூர்த்திவார்த்தை
தன்னைநம்பியொருமுனிவன் றமிழ்த்தென்பாண்டி
காக்கவல்லான்முன்புபட்ட சளங்கேட்டுள்ளார்
கனவாதியவற்றைநண்ணிக் களிக்கப்போமோ
தேக்குதிருத்தியினலஞ் சந்தேகமாகுந், திருவ
ருட்சோதனையைவெல்லுந் திறத்தோருண்டோ
நாக்கசையினுடசையும் பேறுற்றுரு
நலிவதற்காம்விதமறிந்து நடத்துமன்றே. (௰௩)

தெய்வவருளேநலமென் றளவிலாற்றுற்
றெளிந்தபடிகாண்பதற்காச் செபந்தியானஞ்
செய்வதற்குத்துணியின்முழு மனமேவேண்டுஞ்
சிறிதுகுறைந்தாலுமது சீர்படாது
மெய்வழக்கிற்பொய்கலக்குங் கொடிதுங்காட்டும்
வெறுத்துவிடக்கூடாது விண்ணுமண்ணு
முய்வதற்காம்விதங்கருதுஞ் சரதந்தோய்ந்த
வுள்ளத்தாரிகழினு மதோவுறுதே. (௰௪)

இராகவன்கிட்டிணன்முதலோர் விண்டுவென்று
மெழில்வேலுக்கிரன்காழிக் கிறைவனென்னோர்
குராவணிசேயென்றுநுவல் வதுபோற்பல்லோர்
கூறன்முற்றுமந்தக் குறிதொட்டுய்ந்தோர்

KOVILOOR MADALAYAM

தராதலமுய்வதனிமித்த முதித்தவாறாச்
சாற்றுமட்டுந்தேர்ந்தவுபா சகனானோனும்
பராவுமினன்னவன்றவம்வீண் போகிடாது
பரத்துவமுமவனமைத்த படியாமன்றே. (௰௫)

கனவினுஞ்சிற்சிலபலித மாவதுண்டு
கண்டனவெல்லாநிசமாக் கருதிற்றுன்ப
மனவெளிகொள்ளாதுவரு மநுபவத்தில்
வந்தவற்றைக்கண்டமட்டின் மகிழ்தனன்றாந்
தினகரகோடிகளனைய தெய்வமொன்றே
தியானிக்கும்பலவடிவாத் திகழ்ந்திட்டாலுந்
தனதுநிலையுங்குறிக்கு நாமரூபத்
தன்மையும்போற்பலாபலங்கள் சாற்றற்பாற்றே()

மண்முதலாமைந்துவகைப் பூதங்கட்கு
மதிகதிர்க்குமுயிர்க்குமதிட் டானமாகு
மெண்மயமேதமிழ்வண்ணத் தியல்பின்பேதத்
தெண்ணிறந்தகடவுளரா யிலங்குமந்த
வண்மையரனாகம மாதியபன்னூல்கள்
வகுத்திடினுந்தவவலியே வலியதாமா
றுண்மிளிர்மூர்த்தியுமனமுங் கல்லுஞ்சாணை
யுருவமும்போன்றுரிஞ்சநிற்போ ருணரலாமே.()

ஞானவருணெறிக்கடுத்த யோகத்தோரு
நலந்திகழ்சோதிடத்தோரு நவமென்றேதல்
போனவில்பன்மதத்தோரு மவரவர்க்குப்
போந்தபடிவாதிப்பார் பொதுவைநாடிற்
கானமறைநெறியாறே யவைகலந்தே
கழிக்கருமதீதமென்றுங் கவினுங்கண்டீ
ரீனமிகும்புலைச்சமைய மினியொன்றுண்டா
யினுமதுவுமவ்விருமூன் றினதுசார்பே. (யஅ)

காமியம்வேண்டி னுங்கதி வேண்டினுமிரண்டுங்
கலந்துறவேண்டினுஞ் சிவன்மால்கவுரியானை
சாமியெல்லோனெனுமாறு தெய்வத்தொன்றைச்
சந்தேகமின்றிநண்ணத் தகுமம்மார்க்க
மியாமிதனிற்சொல்வதல்லக் குரவற்றேடி
யினிதருளப்பெறவேண்டு மிசைத்துமுள்ளே
மாமிசங்கள்ளரக்காதி யணுவுமாகா
மந்திரமுந்தந்திரமு மனந்தான்மன்னே. (யகூ)

அக்கரத்தாற்சக்கரத்தாற் கும்பந்தன்னு
லாலயத்தாலாராதித் தனைத்துந்தாண்டும்
பக்குவத்தும்பாவனையை விடக்கூடாது
பலநூலுமினிப்பிறக்கும் பாவத்தோரு

முக்கியமீதல்லவென்று விளையாட்டாக, மொழிவ
துண்டு நம்பிவிட்டான் மோசஞ் சொன்னேன்
றிக்கொருங்கு மிருந்ததலத் துணரவல்ல
சிவயோகத் தோர்களுக்குந் தியானமுண்டே. ()

எட்டுவகைச் சித்தியும்பொய் யானமாயை
யெனச்சொல்வா ரகண்டமய மியானேயென்பார்
திட்டெனவோர் புலியேனு மரசனேவுஞ்
சேவகனு மினுமெதிர்த்தாற் றிடுக்கங்கொள்வார்
சுட்டகனற் போன்மிடியு நோயும்வந்தாற்
சொல்வானே னெந்தவிதத் துயருற்றேனுந் [து
தொட்டொருமூர்த் தியின்வடிவைத் தியானஞ்செய்
சுகமடைந்து தனிவீட்டிற் றேய்தனன்றே. (உக)

பலகலையின் மந்திரமும் பலிப்பதெண்ணிப்
பார்த்துவா யிகமெனச்சொல் பதமுந்தாண்டிக்
கலகமிடுஞ் சமையவிகற் பமுந்தீர்ந்தானை
கண்டகுரு டனைத்தேற்றுங் கவிதைபாடும்
புலவருக்கே மூர்த்தியுபா சனைச்சீராகும்
புல்லறிஞர்க் கேதுசெய்யப் புழுத்துக்கொட்டு
மலமுதற்பார்க் குந்தமது கண்ணிற்றெய்வ
வடிவுகண்டான் ஞானபங்கம் வருமென்பாரோ. ()

சச்சிதா னந்தபரம் பொருளே யெந்தச்
சமையத்துந் திகழுமெனச் சாற்றுந்தன்மை
யுச்சிமணிச் சேடன்மக மேருவெற்பை
யொருங்குபற்றல் போலுமொரு மூர்த்திதானே
நச்சியவா ளுருளிருமென்கை யொருபைந்நாக
நவிலுமத னுருகுவட்டை நண்ணல்போலு
மெச்சியுளாத் தற்கரிதாந் தனிவீட்டின்ப
மேவுமவர்க் கிவ்விரண்டும் விருப்பமாமே. (௨௩)

என்கடவு ளேயுயர்ச்சி யென்றுசொல்வா
னிறுமாந்து நாட்கழியா தேங்கிவாடித்
தன்கடவு டிருவுருவைக் காணவேண்டித்
தவித்தானேற் சமரசத்தோர் தம்மிற்சேர்வான்
பின்கடவுள் வேற்றுமைதோற் றுதுசொன்னாற்
பிணங்கிடா னவரோடும் பேசிக்கொள்வான்
முன்கடவுள் வரக்கண்டும் புவியோருய்யு
முறைகருதிப் பலவாறு மொழிவாருண்டே (௨௪)

சமையநெறி தொட்டுநின்று சாதித்துண்மைத்
தவம்புரிந்து தன்னறிவே சாட்சியாகச்
சிமையமலை வாரிகனல் வாளுந்தெய்வத்
திருவருளாற் றுண்டியுய்ந்து சிந்தைவேட்கை

யமையநல்குங் குருவைநம்புஞ் சமரசச்சீ
ரநுபூதி யுடையார்போ லகிலமாலிற்
குமையுமவர் தம்மையெண்ணி னிறத்தின்பெட்பாற்
குலவெகினம் போல்வமெனுங் கொக்கொப்பாரோ.

எத்தெய்வஞ் சீக்கிரத்திற் கருணைசெய்வ
தெனவிசா ரிப்பவன்புண் ணியமட்டுள்ளோ
னித்தெய்வ மேயெனதென் றுனைப்போன்முன்னு
ளேன்றமட்டி லுபாசித்தோ னேதேதெல்லாம்
பொய்த்தெய்வ மென்பவன்மா பாவிவானிற்
புலவர்பிரா னுதியராய்ப் புவியில்வந்தோர்
மெய்த்தெய்வ மேகுருவா யறிவினின்று
விளக்குவதா லளவிலின்ப மேவுவோரே. (உசு)

தெய்வவுருத் தியானநெறி சிறிதுமின்றிச்
செபமொன்றே செய்குவது சிதடர்மார்க்க
மைவகையாம் பொறியுமடங் கிடச்சற்றேனு
மசையாது குறியினிற்ற லான்றோர்கொள்கை
மெய்வழக்காஞ் சமரசந்தேர்ந் திரண்டுந்தோய
விரும்புவது சித்தர்குண மேனுட்பூசித்
துய்வணுப்போன் றுயினும்பெற் றிருந்தோர்க்கன்றி
யுயர்புகழ்த்தீஞ் சுவைத்துதிவாக் குதித்திடாதே.

மலமான களிம்புறுசெம் பனையநெஞ்சை
மாதவமாங் கனலிலிட்டு வல்லோர்சொல்லு
நலமான மருந்ததனுல் வேதிப்போரே
நனவுகன வினிற்றிகழு ஞாயமெல்லாங்
குலமாற்றே சித்தியெனும் வங்கத்துக்குக்
குலையாம ளிற்குமுன்னங் குதிக்கவேண்டாம்
பலகோடி பகையுண்டு பதறுவீரோற்
பழிப்புண்டா மநுபவத்தைப் பகர்ந்திட்டேனே.

கண்டமெனப் பலர்நுவலுஞ் சகளநாட்டக்
காரருக்குந் தனியகண்டா காரஞான
முண்டதுதான் வேறுதெய்வ மிலையென்றோர்த
லுயரகண்ட மெனப்பகர்நிட் களத்தையுன்னுந்
தொண்டரினு மாயைவிராட் டாதியாகச்
சொல்லுகின்ற கண்டபா வனையோருண்டு
விண்டவித மிரண்டுமொன்றுய்க் கலந்தஞாய
மெய்த்தவத்தோர் சத்தியத்தில் விளங்குமன்றே.

காளிகறுப் பண்ணன்முதற் சிலவற்றுயுங்
கடவுளே விளங்குகின்றுன் கண்ணுடிக்கண்
ஞாளிமுகம் பார்க்கிலது சிங்கங்காட்ட
ஞாயமுண்டோ வதுபோல நாடுவார்தங்

நீளியசென் மாந்தரபுண் ணியத்திற்கான
  நெறிதோற்று மாயினுமுன் னிகழ்த்துமாறுங்[தங்
கோளிலவே யவற்றுளொவ்வொன் றினிற்பன்மூர்த்
  குலவுமந்த விபரமுற்றுங் கூறுண்ணுதே.(௩௰)

முக்கண்ணு மான்மழுவும் பொருந்துமீசன்
  முடியின்மயிற் பீலியணி முகுந்தனேந்து
கைக்கணநா யகன்வேலுந் தண்டுந்தாங்குங்
  கரமுருகன் முலைமுதிராக் கவுரிகிழத்
திக்கதனி லெழுகதிரா மாறுமூர்த்தஞ்
  சிறந்தனவென் றறிவறிந்தோர் செப்பக்கேட்டே
னெக்கடவுட் கெவருரிமை பூண்டுற்றாலு
  மெனக்கதுசம் மதமுடிவி லேகந்தானே. (௩௧)

அறிவரிய தெய்வத்துக் குருவஞ்சொல்லி
  ணுண்பெணணு மிரண்டுவித மன்றிவேறு
குறியிலையாற் குகன்வாலை யென்னநூலோர்
  கூறுமிவற் றுன்றைநம்பிக் கும்பிட்டுய்வீர்
பொறிமயிலாங் குடிலைமிசை ஞானசத்தி [ன்
  புனைந்தசெங்கைக் குரவனெனப் போற்றுகின்றே
வெறிகமழ்மென் மலர்ப்பூசை பலநாட்செய்து
  வியன்றமிழான் மிகத்துதித்திவ் விருக்குற்றேனே()

ஆயிரம்பொன் பெறுமானை தன்னைத்தந்திட்
டொப்பணமேபெறுந்தொறட்டியதைநல்கார்போ
மாயிருஞா லத்தின்மிகப் படுத்துந்தன்மை [ன்
வழிபடுமூர்த் திகட்குரிய வழக்கங்கண்டீர்
காயிரும்புண் டிடுநீர்போற் போமாறெண்ணிக்
கலங்காமற் றியானிக்கை கடனுஞ்சொன்னேன்
போயினது வந்ததென்பார் தமக்குநீங்காப்
பொருளென்பார் தமக்குமிதோர் பெயர்த்துநின்மு
ற்றே. (௩௩)

முற்றிற்று.

---

நேரிசை வெண்பா.

செப்பத்துயர்போந் தியானநுபூதியின்பா
முப்பத்துமூன்று முழுதுணர்ந்தோர் - கொப்பத்துக்
குஞ்சரத்தில்வாடார் குறைதீர்ந்தநெஞ்சகமாம்
பஞ்சரத்தில்வாழும் பரம்.

MADALAYAM
8599
R65:31

---

தெய்வமே துணை.